**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.73/2023**
**PW10**

| | | |
|---|---|---|
| **Name** | : | ராஜ்ஜெயக்குமார் |
| **Father's Name** | : | செல்வராஜன் |
| **Village** | : | |
| **Taluk/District** | : | சத்துவாச்சாரி, வேலூர் |
| **Caste** | : | ---------- |
| **Calling** | : | |
| **Religion** | : | ---------- |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.03.2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.03.2023 அன்று பணிநிறைவு பெற்று தற்போது வேலூரில் வசித்து வருகிறேன். கடந்த 25.09.2022 அன்று சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது இரவு 22.00 மணியளவில் சேத்துப்பட்டு கிராமத்தை சேர்ந்த பாடலி என்பவரின் மனைவி மகேஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அந்நிலைய குற்ற எண்.461/2022 சட்டப்பிரிவுகள் 294(b),323,506(1) இதசப்படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5. அன்று இரவு நேரம் என்பதால் சம்பவ இடத்திற்கு மறுநாள் 26.09.2022 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான போளூர் ரோடு , வாதியின் பாத்திரக்கடையிடம் சாட்சிகள் அப்பு , ஜோனா ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடடம் அ.த.சா.ஆ.6. பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் மகேஸ்வரி, பாடலி, சரண்யா, ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடி வந்த நிலையில் அதே தினம் 14.00

மணியளவில் கெங்கைசூடாமணி கூட்ரோடு அருகே வந்தபோது தலைமறைவான எதிரி மூர்த்தி (எ) ஷாமு என்பவரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். மேல்விசாரணைக்கு வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் 18.09.2022 அன்று நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததில் இருந்து 7 வதுநாள்தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 25.09.2022 அன்றுதான் முதல் தகவல் பெறப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் சேத்துப்பட்டு அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் 1 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த கடையின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் வெங்கடேஸ்வரா பாத்திரக்கடை. அதற்கு அடகு கடை என்று தனி போர்டு இல்லை என்றால் சரிதான். இறந்துபோன நபர் சேத்துப்பட்டு அரசு மருத்துவமனையில் சிசிக்சை பெற்றது சம்மந்தமாக விபத்து பதிவேடு நகல் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிரி அடகு வைத்தது சம்மந்தமாக எந்த ரசீதும் நான் கைப்பற்றவில்லை. அடகு வியாபாரம் செய்ய அனுமதி பெற்று இருந்தார்களா என்றால் அது சம்மந்தமான ஆவணங்கள் நான் பார்க்கவில்லை. அது பாத்திரக்கடை மட்டும்தான். தற்போது சாட்சி அடகு தொழில் செய்வதற்கு அந்த கடைக்கு அனுமதி வழங்கவில்லை என்று கூறுகிறார். புகாரில் எதிரி எவ்வாறு தாக்கினார் என்ற வாசகம் உள்ளதா என்றால் உள்ளது. நான் பார்வை மகசர் தயார் செய்தபோது கடை திறந்துதான் இருந்தது. அங்கு புகார்தாரர் மற்றும் பலர் இருந்தார்கள். எதிரி 29.09.2022 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். புகாரில் எதிரியின் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜகோபால் செட்டிநாடு மருத்துவமனையில் மேல்சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லிக்கொடுத்த பொய் புகாரை நான் சரியாக விசாரணை செய்யாமல்

வழக்கு பதிவு செய்து விசாரித்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.